இந்து சமய அறநிலையத்துறை

அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் (ஸ்ரீராகுதலம்), திருநாகேஸ்வரம்

போன் 0435-2463354

ந.க.எண்.327/1432/அ2/நாள்.13.01.2023

## வேலைவாய்ப்பு விளம்பர அறிவிப்பு

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், திருநாகேஸ்வரம் அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயிலில் கீழ்கண்ட விபரப்படியான காலிப் பணியிடங்களுக்கு அரசாணை எண். 114, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை நாள். 03.09.2020ன்படி தகுதியுள்ள இந்து சமயத்தைச் சார்ந்த நபர்களிடமிருந்து 14.01.2023 முதல் 13.02.2023 மாலை 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. அதற்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இதர விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். விண்ணப்பப் படிவம் www.tnhrce.gov.in இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

| வ. எண் | திருக்கோயில் பெயர் | பதவியின் பெயர் | ஊதிய விகிதம் | பணியிடங்கள் எண்ணிக்கை | தகுதி |
|---|---|---|---|---|---|
| 1 | அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில் | உதவி அர்ச்சகர் | PM 17 15900-50400 | 2 | தமிழ் மொழியில் எழுத படிக்க தெரிந்து இருக்க வேண்டும். அறநிறுவனங்கள், அரசு நிறுவனங்கள் இதர நிறுவனங்களால் நடத்தப்படும் ஆகம பயிற்சி பள்ளி அல்லது வேத பாடசாலையில் ஒரு வருடத்திற்கு குறையாமல் பயின்று தேர்ச்சிக்கான சான்று பெற்றிருக்க வேண்டும். |
| 2 | | உதவி பரிச்சாரகர் | PM 10 10000-31500 | 1 | தமிழ் மொழியில் எழுத படிக்க தெரிந்து இருக்க வேண்டும். கோயில்களின் வழுங்கங்களுக்கு ஏற்ப நிவேத்யம் மற்றும் பிரசாதம் தயாரிக்க தெரிந்து இருக்க வேண்டும். |
| 3 | அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில் துக்காச்சி | உபகோயில் காவலர் (துக்காச்சி) | PM 12 11600-36800 | 1 | தமிழ் மொழியில் எழுத படிக்க தெரிந்து இருக்க வேண்டும். |

மேற்படி பதவிகளுக்கான நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலக நேரத்திலும் www.tnhrce.gov.in மற்றும் www.tirunageswaramnaganathar.hrce.tn.gov.in ஆகிய இணையதளங்களிலும் தெரிந்துக்கொள்ளலாம்

# நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரருக்கு 01.07.2022ல் 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். 45 வயதுக்குட்பட்டும் இருக்க வேண்டும்
2. இந்து மதத்தைச் சார்ந்தவராகவும், தமிழ் நாட்டை சார்ந்தவராகவும் இருக்க வேண்டும்.
3. தொற்றுநோய், உடல் அல்லது மனநிலை குன்றிய குறைபாடுகள் உள்ளவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்
4. நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள், பட்ட கடனை தீர்க்க முடியாதவர்கள் என நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டவர்கள் அரசுப் பணியிலிருந்து பொது ஸ்தபானங்களில் இருந்தும் இதர திருக்கோயில்களில் இருந்தும் பணிபுரிந்து தண்டனை காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள், திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள் அவர்களின் வாரிசுதாரர்கள் ஆகியோர்கள் மேற்படி பணிக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.
5. நன்னடத்தை உடையவராக இருக்க வேண்டும். இதற்கு அரசிதழ் பதிவு பெற்ற அரசு உயரதிகாரியிடமிருந்து பெறப்பட்ட நன்னடத்தைச் சான்று பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.
6. இந்த வேலை வாய்ப்பு அறிவிப்பு வெளியிடும் தேதிக்கு முன்னதாக வரப்பெற்ற விண்ணப்பங்களுக்கும் 13.02.2023ம் மாலை 5.45 மணிக்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்களும் மாதிரிப் படிவத்தில் கண்டுள்ளவாறு தேவையான விபரங்கள் மற்றும் இணைப்புகளுடன் வரப்பெறாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
7. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவிக்கும் அந்தப் பதவிக்குரிய கல்வி மற்றும் இதர தகுதி சான்றுகள் மற்றும் இதர விபரங்களுடன் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.
8. விண்ணப்பம் அனுப்பப்படும் மேலுறையின் மீது கண்டிப்பாக பதவியின் பெயர் குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும்.
9. வரப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டு தகுதியுள்ள நபர்களுக்கு மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அறிவிப்பு அனுப்பப்படும்.
10. நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு பயணப்படி ஏதும் வழங்கப்பட மாட்டாது.
11. நேர்முகத் தேர்வுக்கு தேர்ந்தெடுக்கப்படும் நபரை எவ்வித காரணங்களும் கூறாது நிராகரிக்கவும் பணி நியமனம் வழங்காமல் இருக்கவும் திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
12. தேர்வு செய்யப்படும் நபர் சென்னை இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு நியமனம் செய்யப்படுவார்.
13. நியமனம் இந்து சமய அறநிலையத்துறை சட்ட விதிகளுக்குட்பட்டவை.
14. விண்ணப்பதாரர் நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவராக இருக்க வேண்டும்.
15. விண்ணப்பங்களுடன் அனுப்பப்படும் அனைத்துச் சான்றிதழ்களும் அரசு பதிவு பெற்ற அலுவலர் சான்றொப்பம் பெறப்பட்ட புகைப்பட நகல்களாக மட்டுமே இருக்க வேண்டும். அசல் சான்றிதழ்களை அனுப்ப கூடாது.
16. அசல் சான்றிதழ்கள் அனைத்தும் நேர்முக தேர்வுக்கு அழைக்கும்போது எடுத்து வர வேண்டும்.
17. ஏற்கனவே விண்ணப்பித்திருந்தாலும் இவ்விளம்பரத்திற்கு பின்னர் புதியதாக விண்ணப்பிக்க வேண்டும்.
18. விண்ணப்பதாரர் கல்விச் சான்று நகல், வயது சான்று நகல், உடல் தகுதிக்கான மருத்துவ சான்று நகல் மற்றும் நன்னடத்தை சான்று நகல் ஆகியவற்றை இணைத்து அனுப்ப வேண்டும்.
19. திருத்தப்பட்ட அரசாணை (நிலை) எண்.114 தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தி (அநி4-2) துறை நாள் 03.09.2020 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் (Service Rules) விதிகளுக்குட்பட்டது.
20. தெய்வீகத்தாலும், இராஜீகத்தாலும் ஏற்படும் மாற்றங்களுக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.
21. ஒவ்வொரு பணியிடத்திற்கும் தனித்தனியாக எழுத்து தேர்வு / நேர்முகத்தேர்வு நடத்தப்படும்.
22. விண்ணப்பத்தாரர் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி **"உதவி ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம்,** என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவேண்டும்.

எஸ்,சாந்தா, பி.காம்.,
தக்கார்/உதவி ஆணையர்

தா.உமாதேவி எம்.எல்.,
துணை ஆணையர்/செயல் அலுவலர்
உதவி ஆணையர் / செயல் அலுவலர் (கூ.பொ)

இந்து சமய அறநிலையத்துறை

## அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் (இராகு ஸ்தலம்) – திருநாகேஸ்வரம்

கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் – 612 204

புகைப்படம்

| | | |
|---|---|---|
| 1. | விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் | |
| 2. | விண்ணப்பதாரர் பெயர் | |
| 3. | தகப்பனார்/ காப்பாளர் பெயர் | |
| 4. | நிரந்தர முகவரி | |
| 5. | தொலைபேசி / கைப்பேசி எண் | |
| 6. | மின்னஞ்சல் முகவரி | |
| 7. | பிறந்த நாள் – வயது<br>(சான்று இணைக்கப்படவேண்டும்) | |
| 8. | மதம் மற்றும் சாதி<br>(சாதி சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 9. | கல்வி தகுதி<br>(கல்வி சான்று மற்றும் மாறுதல் சான்று நகல் இணைக்கப்படவேண்டும்) | |
| 10. | பதிவு பெற்ற மருத்துவரிடம் பெறப்பட்ட உடற்தகுதி சான்று இணைக்கப்பட வேண்டும் | |
| 11. | நன்னடத்தை சான்று<br>(A அல்லது B கிரேடு அலுவலர்கள் இருவரிடமிருந்து சான்று பெறப்பட வேண்டும். | |
| 12. | முன் அனுபவச் சான்று நகல் இணைக்கப்பட வேண்டும். | |
| 13. | ஆதார் அடையாள அட்டை நகல் | |
| 14. | இதர தகுதிகள் சான்று இணைக்கப்பட வேண்டும். | |

# உறுதிமொழி

திருக்கோயிலால் வெளியிடப்பட்டுள்ள வேலைவாய்ப்பு அறிவிப்பில் தெரிவிக்கப்பட்ட விதிமுறைகளை நான் நன்கு தெரிந்து கொண்டேன் எனவும், நான் இந்து மதத்தை சார்ந்தவர் என்றும், மேற்கூறிய விவரங்கள் அனைத்தும் உண்மையானவை எனவும் உறுதி அளிக்கின்றேன்.

இடம்:

நாள்:

விண்ணப்பதாரர் கையொப்பம்